## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.25/2018

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி D. ஞானசௌந்தரி அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுன் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | மதம் | : இந்து |
| க/பெ | : அர்ஜுனன் | ஜாதி | : -- |
| வயது | : 44 | கிராமம் | : தெக்களூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**04.06.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் அசல் இல்லை. அசல் இல்லை என்பதால் நகல் தாக்கல் செய்கிறோம் என நீதிமன்றத்தில் அனுமதி பெற்றோமா என்றால் இல்லை. (**சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்**) நான் அசல் ஆவணங்களைதான் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலை விஜயகுமார் என்பவர்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுள்ளார் என்றாலும் நான் பெறவில்லை என்றாலும் சரிதான். 1974ம் ஆண்டு ஆவணத்திற்கு 26.04.2018ல்தான் மனு செய்து நகல் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ 2 ஆன குமாரி வாங்கிய ஆவணத்தின் சான்றிட்ட நகலை விஜயகுமார் என்பவர்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுள்ளார் என்றாலும் நான் பெறவில்லை என்றாலும் சரிதான்.

4. வா.சா.ஆ 2 ஆன குமாரி வாங்கிய ஆவணத்திற்கு 26.04.2018ல்தான் மனு செய்து நகல் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ. 1, வா.சா.ஆ 2 ஆவணங்களை வாங்கிய பின்புதான் எனக்கு குமாரி பெயரில் பதிவான விவரம் தெரியுமா அல்லது அதற்கு முன்பே தெரியுமா என்றால்

எனக்கு 2009லேயே தெரியும். 2007ல் வா.சா.ஆ 2 ஆவணம் பதியும்போது குப்பன் மனைவி கன்னியம்மாள் மகள்கள் கற்பகம், சிவகாமி ஆகியோர்கள் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அவர்கள் எனது அப்பாவின் இரண்டாம் மனைவி மற்றும் இரண்டாம் மனைவியின் மூலம் பிறந்த பிள்ளைகள் ஆவார்கள். கன்னியம்மாள், கற்பகம், சிவகாமி ஆகியோர்கள் போயர் இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். 2007லேயே குமாரி சொத்திற்கு ரூ.42,250/– கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

5. வா.சா.ஆ 3 ஆன 4ம் பிரதிவாதி வாங்கிய ஆவணத்தின் சான்றிட்ட நகலை விஜயகுமார் என்பவர்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுள்ளார் என்றாலும் நான் பெறவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ 3 ஆன 4ம் பிரதிவாதி வாங்கிய ஆவணத்திற்கு 26.04.2018ல்தான் மனு செய்து நகல் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். குமாரியும் சொத்தின் சுவாதீனத்தை எடுத்து கொண்டார் என்றால் குமாரி பொய் சொல்லி கிரையத்தை வாங்கிவிட்டார். குமாரி 4ம் பிரதிவாதிக்கு சுவாதீனம் ஒப்படைத்தார் என்றால் அவர் ஒப்படைத்தாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது. வா.சா.ஆ 8 ஆன குப்பனின் இறப்பு சான்றிதழில் அவர் இறப்பு தேதி 30.08.1997 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இறப்பு சான்றிதழ் பெற 2025ல்தான் மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. அதற்கு முன்பே வாங்கி வைத்திருந்தோம்.

6. விண்ணப்ப எண்.2012/2025ல்தான் இறப்பு சான்றிதழிற்கு மனு செய்துள்ளோம் என்றால் அதற்கு முன்பே இறப்பு சான்றிதழ் வாங்கிவிட்டோம். வாரிசு சான்றிதழ்தான் தற்போது வாங்கினோம். குப்பன் இறந்து வெகு காலம் கழித்து சுமார் 28 ஆண்டுகள் கழித்து வாங்கிய வா.சா.ஆ 8 இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழான வா.சா.ஆ 14ம் குப்பன் இறந்து சுமார் 28 ஆண்டுகள் கழித்து 28.12.2025ல்தான் வாங்கியுள்ளோம் என்றால் ஆமாம். இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகியவை இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சட்டப்படியான ஆவணங்களுக்கு எதிரான எனது வாய்மொழி சாட்சியம்

செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ 10 கன்னியம்மாள் இறப்பு சான்றும் 13 வருடங்கள் கழித்துதான் வாங்கியுள்ளோம் என்றால் நாங்கள் ஏற்கனவே வாங்கியதுதான். இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் ஆகியவற்றை வழக்கு தாக்கல் செய்ய வேண்டி பெற்றுள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ 11 ஆன பட்டாவில் நீதிமன்ற உத்தரவிற்குட்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கிராம நிர்வாக அதிகாரி அளித்த வா.சா.ஆ 6 அடங்கல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அதிகாரி அளித்த வா.சா.ஆ 7 செட்டில்மெண்ட் பதிவேடு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ 5 வம்சாவழிப்பட்டியலில் முதல் மனைவி, இரண்டாம் மனைவி என காட்டியுள்ளதில் அவர்கள் எந்த தேதியில் இறந்தார்கள் என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதற்காகதான் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளோம். ஜீவரத்தினம்மாளுக்கு எப்போது எங்கே திருமணம் நடந்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டாம் மனைவி கன்னியம்மாளுக்கு எப்போது எங்கே திருமணம் நடந்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குப்பன் முதல் மனைவியுடன் வசித்ததற்கான குடும்ப அட்டை, அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டாம் மனைவியின் குடும்ப அட்டை, அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. நான் கிரைய விவரம் தெரிந்த 3 வருடங்களுக்குள் இந்த வழக்கை தாக்கல் செய்யாமல் 22 வருடங்கள் கழித்து காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணத்தை நான் எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 9 ஜீவரத்தினம்மாள்

இறப்பு சான்று வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியம் சொத்து தனக்கு பாத்தியம் பட்டா, சிட்டா தன் பெயரில் உள்ளது என்றும் அ.வ.எண்.61/2016 தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 12 வில்லங்க சான்றிதழில் குமாரிக்கு கிரையம் கொடுத்த விவரம் உள்ளது என்றால் சரிதான். குப்பனுக்கு இந்த வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் உள்ளது. அதற்காக இந்த சொத்தை விடமுடியாது.

10. குப்பனின் இதர சொத்துக்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. குப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மொத்தம் எத்தனை ஏக்கர் இருக்கும் என்றால் 5 ஏக்கர் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.25/2018 நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் அ.வ.எண்.61/2016 தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)